1968 மார்ச் 28]

திரு. ஜே. ஜேம்ஸ்: தொழிலாளர் கல்வித் திட்டம் மூலமாக அங்கங்கே சில தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டு, பயிற்சி அளிக்கப்பட்ட தொழிலாளர்களைக் கொண்டு மீண்டும், மீண்டும் அங்கங்கே வகுப்புகள் நடத்தி எல்லாத் தொழிலாளர் களுமே இந்தத் திட்டத்தின் பயனைப் பெறக்கூடிய வகையில் அரசாங்கம் திட்டம் வகுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுது அந்தத் திட்டம் இல்லை.

திரு. மா. பா. சாரதி: தலைவர் அவர்களே, நமது சர்க்கார் நடத்தும் எல்லா கூட்டுறவு நூற்பாலைகளிலும் இந்தக் கல்வித் திட்டத்தை விஸ்தரிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எங்கெங்கே முடியுமோ அங்கெல்லாம் விஸ்தரிக்கப்படுகிறது.

திருச்சி நகரத்திற்கு சாக்கடை அமைப்புத் திட்டம்

*357 வினா.—திரு. வை. சுவாமிநாதன்: மாண்புமிகு மருத்துவத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரத்தில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

(இ) அதற்காக அரசாங்கம் கடனாகவோ, மான்யமாகவோ எவ்வளவு கொடுக்க உத்தேசித்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ): திருச்சிராப்பள்ளி வடிகால் திட்டத்திற்கு புலனாய்வு வேலைகள் முடிந்துவிட்டன. இந்தத் திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரால் இப்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றன. மதிப்பீடுகளுக்கு அரசு ஒப்புதல் அளித்த பிறகு இந்தத் திட்டம் நிதி நிலைமையைப் பொறுத்து வேலை துவங்கப்படும்.

திட்டத்திற்குப் பண உதவி கொடுப்பதுபற்றி ஒப்புதல் அளிக்கும் சமயம் கவனிக்கப்படும்.

திரு. வை. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, நெடுங்காலப் பிரச்சனையாக இருந்துவருகிற இந்தப் பாதாள சாக்கடைத் திட்டத்தை அரசாங்கம் முழு முயற்சி செய்து விரைவிலே நிறை வேற்றுவதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அதுபற்றிப் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. நா. காசிராமன்: சார், திருச்சிக்கு உண்டான இந்தப் பாதாள சாக்கடைத் திட்டத்தை அமல்செய்யும்பொழுது அந்தச் சாக்கடையிலிருந்து வரும் கழிவு நீரைக்கொண்டு புல், கறிகாய்கள் உற்பத்தி செய்வதற்கான திட்டத்தையும் இந்தத் திட்டத் தோடு கையோடு சேர்த்துப் போடுவதன் மூலம் இந்தச் சாக்கடை

திட்டத்திற்காக ஆகின்ற வருஷாந்திர செலவுகளில் ஒரு பகுதியை அது சரிக்கட்டக் கூடிய வாய்ப்பு இருக்கும். ஆகவே அதையும் சேர்த்து எடுத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் அங்கத்தினர் அவர்களுடைய யோசனையைப் பரிசிலனைசெய்யலாம்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : திருச்சி பாதாள சாக்கடைத் திட்டத்தைப்பற்றிய கேள்வியாக இருந்தாலும் இம்மாதிரி வேறு மாவட்டங்களின் தலைநகரங்களில் எந்த எந்த இடங்களிலே இப்படிப்பட்ட திட்டம் இருக்கிறது? இருந்தால் சொல்லுங்கள். இல்லை யென்றால் வேண்டாம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனம் உறுப்பினர் அவர்கள் சொல்வதுபற்றி இப்பொழுது விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

Electricity Loan Bonds

* 358 Q.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether there is any Government order to the Panchayat Union Commissioners to collect loans to 5-1/2 per cent Electricity Loan Bonds and Small Savings Certificates from the ryots who are getting improvement loans from the Blocks?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : இல்லை.

THIRU B. VENKATASWAMY : From the answer given by the Hon. Minister I come to know that there is no such Government order. But the District Collectors insist on the collection at the time of granting the loan and the Panchayat Union Commissioners mercilessly demand two hundred or three hundred rupees from those who apply for the loan and they reject the applications if they refuse to give the amount. Will the Government issue strict orders not to harass the poor ryots?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படி விவசாயிகளை கட்டாயப் படுத்தக்கூடாது என்ற உத்திரவு ஏற்கனவே இருக்கிறதென்றாலும். எங்கேயாவது அப்படிப்பட்ட சிக்கல் இருப்பதாகக் குறிப்பிட்டுக் காட்டினால் அதுபற்றி விசாரிக்கப்படும்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : எலக்ட்ரிசிட்டி லோன்ஸ், ஸ்மால் சேவிங்க்ஸ் இவற்றிற்காக பஞ்சாயத்து நிதியிலிருந்து வசூல் செய்ய ஒவ்வொரு ப்ளாக் கமிஷனர் வருகிறார்கள். ப்ரசிடென்ட்டிடம் கேட்டு டெப்பாசிட்டில் எவ்வளவு இருக்கிறதோ அதில் 80 சத வீதம் ஒதுக்கவேண்டுமென்று கையெழுத்து வாங்கிப் போகிறார்கள். கமிஷனர் நேரில் வந்து கேட்கும்போது பஞ்சாயத்து தலைவர்கள் கையெழுத்துப் போட்டுக் கொடுத்து விடுகிறார்கள். ட்ரெஷரியில் பஞ்சாயத்து நிதி இருக்கிறது. ஒரு ஹெட்டிலிருந்து இன்னொரு ஹெட்டுக்குக் கொண்டு போகக் கூடாது என்று ஒரு ஜி.ஓ. இருக்கிறது. அதற்கு முரணாக, தங்கள்